13.08.2026
அ.வ.எண். 233 / 2021
வா.சா–2 தண்டபானி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நான் வழக்கில் சாட்சியமளிப்பதற்கு பிரதிவாதி எனக்கு தகவல் சொன்னார். குணசேகரன் சொல்லித்தான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. குணசேகரன் எனக்கு சொந்தக்காரர் ஆவார். 10.05.2019 தேதி சண்முக சுந்தரம் கடன் வாங்கினார். அதனுடைய தமிழ்தேதி தெரியாது. குணசேகரனும் அவருடைய மாமியாரும் ஒரே வீட்டில்தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் புரோநோட்டில் காலை 10.00 மணிக்கு கையெழுத்து செய்தேன். புரோநோட்டை பழனிச்சாமி எழுதினார். அவரை தெரியும். அவர் என்னுடைய உறவினர்தான். நான் கையெழுத்து போட்ட சமயத்தில் குணசேகரன் வீட்டில் குணசேகரன், சண்முகசுந்தரம், நான், குணசேகரன் மனைவி, பழனிச்சாமி ஆகியோர்கள் இருந்தோம். மை பேனாவில் எழுதினார்கள். அது பழனிச்சாமியினுடையதாகும். நானும் மை பேனாவில் தான் கையெழுத்து போட்டேன். புரோநோட்டில் ரேகை வைக்கப்படவில்லை. சண்முக சுந்தரம் 2 கையெழுத்து போட்டார். அந்த கையெழுத்தை எந்தபேனாவினால் கையெழுத்து போட்டார் என்று எனக்கு தெரியவில்லை. அவர் வைத்திருந்த பேனாவில் போட்டார். அதில் 2 ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டிருந்தது. இரண்டு ஸ்டாம்பில் ஒரு கையெழுத்தும் அதன் கீழே ஒரு கையெழுத்தும் போட்டார். ரூபாய் பதினைந்து லட்சமானது 500 ரூபாய் கட்டுகளாக 30 கட்டுகள் இருந்தது. சண்முகசுந்தரம் எனது உறவினரா என்றால் உறவினர்தான். சண்முகசுந்தரமும் குணசேகரனும் உறவினர்தான். இருவரும் சேர்ந்து பைனான்ஸ் செய்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் உள்ள என்னுடைய கையெழுத்தும்

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள என்னுயை கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். அவை நான் போட்டதுதான். பிரதிவாதியின் 2 கையெழுத்தும் புரோநோட்டில் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் ஒரு ஸ்டாம்பு ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறுவதுபோன்று 10.05.2019 ம் தேதி வாதியிடம் பிரதிவாதி ரூபாய் பதினைந்து லட்சம் கடனாக வாங்கவில்லை என்றும், தாவா புரோநோட்டை பிரதிவாதி எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ளது பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றும், அதை நானும் வாதியும் மற்றொரு சாட்சியும் சேர்ந்து உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் அவர் போர்ஜரி செய்வதற்கு நான் உடந்தையாக இருந்து அவருக்கு ஆரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.13 15:29:00 +0530

Principal District Judge,
Dindigul.